[2022 ஏப்ரல் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பஞ்சாயத்துகள் எல்லாம் ஏற்கெனவே சொன்னதுமாதிரிதான். நம்முடைய மாண்புமிகு. . . (குறுக்கீடு) அதற்கு பதில் சொல்லிவிட்டார்கள்.*

வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

114—

சிப்காட் தொழிற்பூங்கா

***7435—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, மேல் செங்கத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டம், மேல் செங்கத்தில் தனியாக சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்கான உத்தேசம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த 5 ஆண்டுக்காலமாக மேல் செங்கத்தில் இருக்கின்ற 12,000 ஏக்கர் இடத்தைப்பற்றி அரசிடம் பேசிக்கொண்டேயிருக்கிறேன். இதுவரையில் எந்தத் தீர்வும் காணப்படவில்லை. இப்போதும் அந்த வினாவை எழுப்பியிருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க உத்தேசம் எதுவும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள்.*

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு, அங்கே, தமிழக அரசின் நிலத்தை, ஒன்றிய அரசு வாடகைக்கு எடுத்து, அப்போது மத்திய, மாநிலப் பண்ணையாக செயல்பட்டது. இப்போது அந்த இடம் வனக்கோட்டத்தின் சார்பில் தற்காலிகப் பயன்பாட்டிற்காகப்

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2022 ஏப்ரல் 18]

பயன்படுத்தப்படுவதாகக் கருதப்படுகிறது. ஆனாலும், நான் வருவாய்த் துறையிலும் கேட்டுவிட்டேன். வனத் துறையிலும் கேட்டுவிட்டேன். அனைத்துத் துறைகளிலும் கேட்டுவிட்டேன். அந்த நிலம் யாரிடத்தில்தான் இருக்கிறது என்று தெரியவில்லை. அரசு அது எங்கேயிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, அதுவும் நம் தமிழ்நாட்டிற்கு உரிய இடம், எங்கேயிருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து, அந்த இடத்தில் புதியதாக ஒரு I.T. பூங்கா அமைக்கலாம். அது பாண்டிச்சேரியையும், கர்நாடகாவையும் இணைக்கின்ற தேசிய நெடுஞ்சாலை. இந்தியத் திருநாட்டில் இருக்கின்ற அனைத்து தொழில் நிறுவனங்களும், தொழில் முதலீட்டாளர்களும் வருவதற்கு ஏதுவான தேசிய நெடுஞ்சாலையில், 12,000 ஏக்கர் நிலம் அமைந்திருக்கிறது. அதை அரசு பயன்படுத்தி, I.T. பூங்கா அமைத்துத் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் பூங்காக்கள் அமைப்பதற்கு நிலம் முதலில் தேவை. நிலம் இருக்கக்கூடிய இடங்களில் தொழில் பூங்காக்களை அமைக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன சொல்கிறார் என்றால், என்னை, நிலத்தைக் கண்டுபிடித்துத் தரச் சொல்கின்றார். நான் இருக்கின்ற வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு, நிலத்தைக் கண்டுபிடித்து, அப்படி கண்டுபிடித்த இடத்தில், அதற்குப்பிறகு தொழிற் பூங்கா அமைப்பது என்பது கொஞ்சம் சிரமமான காரியம். எனவே, அந்தத் துப்பறியும் வேலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொள்வார் என்றால், தொழிற் பூங்கா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12,000 ஏக்கர் நிலமும் அரசு இடம் என்பதால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பின்தங்கிய மாவட்டங்களெல்லாம்

முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தில் அங்கெல்லாம் தொழிற் பூங்காக்களை அமைக்க வேண்டுமென்று அறிவித்தார்கள்.

திருவண்ணாமலை மாவட்டம், பின்தங்கிய மாவட்டம் என்பதால், வடக்குப் பகுதியான செய்யாறு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் காலத்தில் SIPCOT Phase I மற்றும் Phase II ஆரம்பிக்கப்பட்டது. இப்போது, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, சிப்காட் தொழிற்பூங்காவில் மூன்றாவது அலகையும் அமைப்பதற்கு அறிவித்திருக்கிறார்கள். அதற்காக எங்கள் மாவட்ட மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வடக்குப் பகுதியிலும், தெற்குப் பகுதியிலும் இருக்கின்ற படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு, செங்கம் பகுதியையும், திருவண்ணாமலை பகுதியையும் ஒருங்கிணைக்கின்ற இடத்தில் பெரும்பான்மையான அரசு புறம்போக்கு இடங்கள் இருக்கின்றன. அந்த இடங்களை பயன்படுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிப்காட் தொழிற் பூங்கா அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் பகுதி பிற்படுத்தப்பட்ட பகுதி. அந்தப் பகுதியில் தொழிற்பூங்கா அமைக்கப்பட வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானதும், முக்கியமானதுமாகும். குறிப்பாக, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அதுகுறித்து பலமுறை என்னுடைய கவனத்திற்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பகுதியில் எதிர்காலத்தில் தொழில் மனைகளின் தேவையைக் கருத்தில் கொண்டு, வரக்கூடிய காலங்களில் அரசு இதுகுறித்து ஆராய்ந்து, அத்தகையதொரு வாய்ப்பு ஏற்படும் என்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு தொழில் துறை எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

2022 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள்.*

திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் 1,783 ஏக்கர் நிலப்பரப்பில் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்காக முன்மொழிவுகள் அனுப்பப்பட்டன. அதில், 1,233 ஏக்கர் அரசு புறம்போக்கு இடமாகும். மீதம் இருக்கக்கூடிய 550 ஏக்கர் இடம் தனிநபர் பட்டா நிலமாகும். தனி நபர் இடங்கள் இடையிலே சேர்ந்து வந்த காரணத்தினால், நிலத்தைக் கையகப்படுத்துவதில் காலதாமதம் ஏற்பட்டது. தற்போது ஒட்டுமொத்தமாக 1,000 ஏக்கர் பரப்பளவில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, தயார் நிலையில் உள்ளது. இந்நிலையில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு சிப்காட் தொழிற்பூங்கா தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, அது விரைவில் நடைபெறுமா என்பதைக் கேட்டு, அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. அன்பழகன் அவர்கள் குறிப்பிடுவதைப்போல, ஏற்கெனவே 1,700 ஏக்கர் பரப்பில் சிப்காட் தொழிற்பூங்கா அமைப்பதற்கான கருத்துரு அரசுக்கு வரப்பெற்று, ஓரளவிற்கு நிலம் எடுக்கக்கூடிய பணிகள் நிறைவுபெற்றுள்ளன. மிக விரைவில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனம் மகிழத்தக்க வகையில், அந்த இடத்தில் முழுமையாக சிப்காட் தொழிற்பூங்காவை உருவாக்குவதற்கு அரசு விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. சின்னப்பா அவர்கள்.*

திரு. கு. சின்னப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். அரியலூர் மாவட்டம், அரியலூருக்கு அருகில் மல்லூர் கிராமத்தில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்க 2013–ல் 10.26 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அது 33 மனைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை அதில் மேற்கொண்டு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.*

அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், அந்த நிலத்தின் மதிப்பு சந்தை மதிப்பைவிட அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களிடம் உடனடியாக அங்கு சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு ஏற்கெனவே சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கப்பட்டு, தொழில் மனைகள் பிரிக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். நான் துறையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்து, அங்கே இப்போது இருக்கக்கூடிய நிலையைக் கண்டறிந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எழுப்பியிருக்கக்கூடிய வினாவின் அடிப்படையில், அதற்கு உரிய நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பகுதியில் இருக்கக்கூடிய சிப்காட் தொழிற்பேட்டையில் வேலை செய்யக்கூடியவர்களெல்லாம் காஞ்சிபுரத்திலிருந்து பேருந்துகள்மூலம் அழைத்து வரப்படுகிறார்கள். அங்கிருந்து செய்யாறு பகுதிக்கு வரும் வழியில் traffic jam ஆவதால், இரண்டு மணி நேரம் முதல் இரண்டரை மணி நேரம் வரை ஆகிறது. ஆனால், திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர் மற்றும் செங்கம் போன்ற பகுதிகளிலிருந்து 1 மணி நேரத்தில் செய்யாறு பகுதிக்குச் செல்லலாம். ஆகவே, அந்தத் தொழிற்சாலைகளுக்குச் செல்ல கீழ்பெண்ணாத்தூர் பகுதியிலிருந்து பேருந்துகளை இயக்கினால், விரைவில் அங்கு செல்ல முடியும். பெண்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய வாய்ப்பு உருவாகும். திருவண்ணாமலை மாவட்டத்தில் அமைந்துள்ள சிப்காட் தொழிற்பேட்டையில், எங்கள் மாவட்ட மக்கள் வேலை செய்ய முடியாத நிலை இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொழிற்சாலை நிருவாகத்திடம்

2022 ஏப்ரல் 18]

எடுத்துச் சொல்லி, அந்தப் பேருந்துகளை கீழ்பெண்ணாத்தூர் பகுதியிலிருந்து இயக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பகுதியில் அமைந்திருக்கக்கூடிய தொழிற்பூங்காவில் இயங்கக்கூடிய தொழிற்சாலைகளில் அதிக அளவில் பெண்கள் இன்றைக்கு வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள். ஏறத்தாழ, 24,000 பேருக்குமேல் அங்கு வேலை பார்க்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அது பூகோள ரீதியாக காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு மிக அருகில் அமைந்துள்ள காரணத்தினால், காஞ்சிபுரம் மாவட்டத்திலிருந்து அதிகமான தொழிலாளர்கள் அத்தொழிற்சாலைக்கு வருகிறார்கள். என்ன இருந்தாலும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் அந்த மண்ணின் மைந்தர் என்ற வகையில், தன்னுடைய மாவட்டத்திலிருந்து நிறைய பேர் அங்கு வேலைக்கு வர வேண்டுமென்று அவர் எதிர்பார்ப்பதில் நியாயம் இருக்கிறது. அவர் இருக்கக்கூடிய கீழ்பெண்ணாத்தூர் பகுதியிலிருந்து அந்தத் தொழிற்சாலைகளுக்கு வருவதிலே* logistic *ஆக அவர்களுக்கு பிரச்சினை ஏதும் இல்லையென்று சொன்னால், நிச்சயமாக தொழிற்சாலை நிருவாகத்திடம் நாங்களும் எடுத்துச் சொல்லி, அவருடைய பகுதியிலிருந்தும் அந்தத் தொழிற்சாலைகளுக்கு உரிய பணியாளர்களை அதிக அளவில் கொண்டு வருவதற்கான வாய்ப்புகளை நாங்கள் ஆராய்வோம்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி–நம்பியூருக்கு இடையில் தத்தனூர் என்ற கிராமத்தில் 805 ஏக்கர் நிலங்கள்* SIPCOT *மூலமாகத் தேர்வு செய்யப்பட்டு, மக்கள் போராட்டம் நடத்திய காரணத்தின் அடிப்படையில் அது நிறுத்தப்பட்டது. அங்கே ஒரு ஏக்கர், 2 ஏக்கர் அளவு நிலங்கள் மட்டும்தான் அவர்களுக்குஇருக்கிறது.*

எல்லோருமே சிறிய விவசாயிகள். ஏறத்தாழ 4,000 குடும்பங்கள் அங்கே இருக்கின்றன. இப்போது அதற்குப் புதிதாக survey செய்ய வேண்டுமென்று ஓர் உத்தரவு வழங்கி, 1,400 ஏக்கர் எடுப்பதாகச் சொல்கிறார்கள். அதை நிறுத்துவதற்காக ஒரு பெரிய போராட்டமே நடத்தினார்கள். முந்தைய ஆட்சிக் காலத்தில் அதனை நிறுத்துவதற்காக ஆணைகள் வெளியிடும் முன்பு தேர்தல் வந்த காரணத்தினால் அது நிறுத்தப்படவில்லை. அந்த மக்கள் சிறிய அளவில் நிலங்களை வைத்துக் கொண்டிருப்பவர்கள். அங்கே SIPCOT வரக்கூடாதென்று இப்போது போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு பரிசீலித்து அது நிறுத்தப்படுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிப்காட் வேண்டுமென்பது கேள்வி. நீங்கள் வேண்டாமென்று கேள்வி கேட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாணயத்தினுடைய இரு பக்கம்போன்று, ஒருபுறம் இருக்கக்கூடியவர்கள் SIPCOT தொழிற்சாலை வேண்டுமென்று கேட்கிறார்கள்; இன்னொருபுறம் இருப்பவர்கள் வேண்டாமென்று சொல்கிறார்கள். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே மிகத் தெளிவான ஒரு கருத்தை, ஓர் அறிவுரையை எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். விவசாயிகளுடைய நலனைப் பாதிக்கின்றவகையில் எந்த ஒரு திட்டத்தையும் அரசாங்கம் நிச்சயமாகச் செயல்படுத்தாது என்கின்ற உறுதிமொழியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, தொழிற்பேட்டைக்குத் தேவையான நிலங்களை நாங்கள் கையகப்படுத்துகின்றபோது கூடுமான அளவுக்கு அவர்களிடத்திலே பேச்சுவார்த்தை நடத்துகிறோம். Private negotiation ஆக நடத்துகிறோம்; Compensation–ஐப் பொறுத்தவரையில், மற்ற மாநிலங்களில் இருப்பதைவிட அதிகமாக compensation–ஐக் கொடுத்து நிலத்தை எடுப்பதற்கும் அரசு தயாராக இருக்கிறது. கூடுமான அளவிற்கு அந்த நிலங்களை எடுக்கின்றபோது புறம்போக்கு நிலங்களாக இருந்தால் பரவாயில்லை. ஏனென்றால் தொழில் வளர்ச்சிக்கு நிலம் தேவையாக இருக்கிறது. விவசாய நிலங்களைக் கையகப்படுத்துகிறபோது இந்தப் பிரச்சினைகள் வருகின்றன.

2022 ஏப்ரல் 18]

குறிப்பாக, நம்முடைய மாண்புமிகு அண்ணன், முன்னாள் அமைச்சர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோன்று, அவினாசியிலே அந்தப் பிரச்சினை வந்தது. ஏனென்று கேட்டால், அங்கே இருக்கக்கூடியவர்களெல்லாம் பெரிய அளவில் நிலம் வைத்திருக்கவில்லை. "ஒரு ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறோம். எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது" என்று பிரச்சினையைச் சொல்கிறார்கள். நம்முடைய முன்னாள் பேரவைத் தலைவர் அண்ணன் திரு. ப. தனபால் அவர்கள்கூட அன்றைக்கு இதுகுறித்து அரசின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள். எனவே, அந்த இடத்தில் இருக்கக்கூடிய சூழ்நிலையைக் கருத்திலே கொண்டு, இப்போது நாங்கள் அந்த நில எடுப்புப் பணிகளை நிறுத்தி வைத்திருக்கிறோம். வருங்காலங்களில் அவர்களுடன் பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுரையை ஏற்று, சுமுகமான வழியிலே அதைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரத்தில்* SIPCOT *தொழிற்பூங்கா அமைப்பதற்கு 2012 ஆம் ஆண்டு இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்குப் பெயர்ப் பலகையும் வைக்கப்பட்டது. ஆனால், துவங்கப்படவில்லை. 2015 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் "நமக்கு நாமே" நடைபயணத்தின்போது வருகை தந்தபோது, வேலையில்லாப் பட்டதாரி இளைஞர்கள் கருத்தரங்கிலே கலந்துகொண்டு, ஆட்சிக்கு வந்தவுடன், இந்த* SIPCOT *தொழிற்பூங்காவை உருவாக்கித் தர வேண்டுமென்று அவர்களிடம் கோரிக்கை வைத்தார்கள். ஆனால், 2016-ல் ஆட்சியில்லாது போனதால் இரண்டு முறை இந்த மன்றத்திலே நானும் அந்தக் கேள்வியை எழுப்பினேன். அதற்குச் சரியான பதில் இல்லை. ஆகவே,* SIPCOT *தொழிற்பூங்கா அமைக்க இடமும் தேர்வு செய்யப்பட்டு, பெயர்ப் பலகையும் வைக்கப்பட்டுள்ள சங்கராபுரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லி, இந்த ஆண்டிலேயே இந்தத் தொழிற்பூங்காவை உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, SIPCOT தொழிற்பூங்கா ஓரிடத்திலே அமைக்க வேண்டுமென்று சொன்னால், சில அடிப்படை நிபந்தனைகளை நாம் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது. SIPCOT தொழிற்பூங்கா வரக்கூடிய இடம், அந்த இடத்திற்கான போக்குவரத்து வசதிகள், அங்கே தேவைப்படக்கூடிய தொழில்மனைத் தேவைகள் போன்ற பல்வேறு விஷயங்களைக் கருத்திலே கொண்டு, நாம் தொழிற்பூங்காக்களை அமைக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே அங்கே தொழிற்பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக ஒரு தகவலைச் சொல்கிறார்கள். தொழிற்பூங்காக்களை அங்கே அமைப்பதனால் நிச்சயமாக அந்தப் பகுதியில் தொழில் வளர்ச்சி உருவாகுமென்று சொன்னால், தொழில்முனைவோர்கள், தொழில் முதலீட்டாளர்கள் அந்தப் பகுதியைத் தேர்வுசெய்து வருவார்களென்று சொன்னால், நிச்சயமாக வரக்கூடிய காலங்களில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலத்திலே அவினாசியிலும் சரி, அன்னூரிலும் சரி, தொழிற்பூங்காக்கள் வருவதற்கு எதிராக மக்கள் இருப்பதற்கான காரணம், இதற்கு முன்னால் நடந்த வரலாறுகள்தான். பெருந்துறை சிப்காட்டிலே தொழிற்பூங்கா அமைக்கும்போது, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரே ஒரு கேள்வி இருந்ததென்றால் சுருக்கமாகக் கேளுங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்தினை வேறு எதற்கும் பயன்படுத்தாதீர்கள். (குறுக்கீடு) இப்போது என்ன வேண்டுமென்று சொல்லுங்கள்.

முற்பகல் 10—20

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறையில் சாயப்பட்டறைகள் வராது என்று உறுதிமொழி கொடுத்துத்தான் அங்கே தொழிற்பூங்கா அமைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு என்ன வேண்டுமென்று சொல்லுங்கள்.

2022 ஏப்ரல் 18]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *2009 ஆம் ஆண்டு விரிவாக்கம் செய்ய நிலங்கள் எடுக்கப்பட்டபோதுகூட, அன்றைக்கு துணை முதலமைச்சராக இருந்த இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தப் பகுதிக்குச் சுற்றுப் பயணம் வந்தபொழுது, நாங்கள் சாலையில் நிறுத்தி கேட்டபொழுது, உடனடியாக அந்த விரிவாக்கப் பணியை நிறுத்தினார். கொங்குமண்டலத்திலே தொழிற்பூங்காக்கள் அமைத்தால் சாயப்பட்டறைகள் வராது என்று மக்கள் நம்புகின்ற வகையில் செய்தால் அங்கு எதிர்ப்பு இருக்காது என்பதை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனைக்கு நன்றி.*

வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

115—

சமுதாயக் கூடம்

***14171—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஒன்றியம், சிறுபனையூர் ஊராட்சியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் தொகுதி, சிறுபனையூர் ஊராட்சியின் மக்கள்தொகை 2,485 ஆகும். சிறுபனையூர் ஊராட்சியிலிருந்து திருவரங்கம் ஊராட்சி 4 கி.மீ. தொலைவில் உள்ளது. ஆகவே, திருவரங்கம் ஊராட்சியில் உள்ள சமுதாயக் கூடத்தை சிறுபனையூர் ஊராட்சி மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, சிறுபனையூர் ஊராட்சிக்கென தனி சமுதாயக் கூடம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.